விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 13 ஜ. அவ். 11 இதழ் 15

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25—2—83

MASTER
INSTITUTES
B. M. C. லேன், யாழ்ப்பாணம்.
G. C. E. (A/L)
விஞ்ஞான
வினா - விடை வகுப்புகள்
நாளை ஆரம்பம்
6320

MASTER
INSTITUTES
B. M. C. லேன், யாழ்ப்பாணம்.
G. C. E. (A/L)
விஞ்ஞான
வினா - விடை வகுப்புகள்
நாளை ஆரம்பம்
6319

PUBLIC LIBRARY
JAFFNA

★ நீர்வேலி வங்கி கொள்ளை-கொலை வழக்கு:

# ஆறு எதிரிகளும் குற்றவாளிகள்:

# மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு

## தண்டனை 28-ல் வழங்கப்படும்

(இ. கந்தசாமி)

நீர்வேலி வங்கிக்கொள்ளை, கொலை வழக்கில் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்த ஆறு எதிரிகளும் குற்றவாளிகளென கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. சி. எல். ரி. மூனமலே தீர்ப்பளித்தார். எதிரிகளுக்குத் தண்டனை வழங்குவதை, இம்மாதம் 28-ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார். அன்றையதினம், தீர்ப்புக்கான காரணங்களையும் அவர் தெரிவிப்பார்.

1981-ம் ஆண்டு மார்ச் மாதம் நீர்வேலியில் இரு பொலிசாரைச் சுட்டுக் கொலை செய்தது, வங்கிப் பணத்தைக் கொள்ளையடித்தது, அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தது ஆகியநான்கு குற்றச் சாட்டுக்களில் ஆறு எதிரிகள்மீது வழக்குத்தொடரப்பட்டிருந்தது.

### எதிரிகள் விபரம்

இவ்வழக்கில், தங்கத்துரை அல்லது நடராஜா தங்கவேலு முதலாம் எதிரியாகவும், இரண்டாம் எதிரியாக குட்டிமணி அல்லது செல்வராஜா யாசகச்சந்திரனும், மூன்றும் எதிரியாக தேவன் அல்லது செல்லத்துரை இவசுப்பிரமணியம், நான்காம் எதிரியாக சிவபாதன் மாஸ்டர், ஐந்தாம் எதிரியாக சுந்தரம் அல்லது ஸ்ரீசபாரத்தினம், ஆறும் எதிரியாக வைத்திலிங்கம் நடேசுதாசன் அல்லது செனட்டர்

(8-ம் பக்கம் பார்க்க)

## "என்றே ஒருநாள் நீதியை பெறுவோம் என்பது திண்ணம்!"

### நீதிமன்றத்தில் குட்டிமணி

[கொழும்பு]

'இந்த நீதிமன்றம்' எனது 'சுதந்திரத்திலும், சுயநிர்ணய உரிமையிலும் தொடர்ந்து தலையிட்டு, நீதியைக் கறுப்புப் போர்வையினுல் மூடிவைத்துவிட்டு, விசாரணை என்ற நகைச்சுவை நாடகத்தை ஆரம்பித்தது; நாமும் அந்த நாடகத்தில் பங்குபற்றினேம். சிறிலங்கா அரசு நமது எதிரி. நாமும் அதில் சிக்கிய தமிழ் ஈழப்போராளிகள்'

இவ்வாறு நேற்று புல்லர்ஸ் வீதி மேல் நீதிமன்றத்தில், குட்டிமணி என்ற செல்வராசா யோகச்சந்திரன் தனது நீண்ட அறிக்கையொன்றை நீதிபதி திரு சி எல். ரி. மூனமலே முன்னிலையில் படித்தார்.

நீர்வேலி கொள்ளை, கொலை வழக்கு விசாரணை நேற்று முடிந்தபின்னர். எதிர்தரப்புச் சட்டத்தரணி சத்தியேந்திரா எழுந்து எதிரிகள் இப்போது தமது கருத்துக்களைக் கூறுவார்கள் என்று தெரிவித்தார். இதனையடுத்து, எதிரிகள் வரிசைக்கிரமமாக ஒவ்வொருவரும், தமது கூண்டில் எழுந்து நின்று நீண்டநேரம் உரை நிகழ்த்தினூர்கள்.

குட்டிமணி தொடர்ந்து கூறியதாவது:-

'எமது விடுதலை இயக்கத்தின் தலைவரும், முதலாம் எதிரியுமான தங்கத்துரை நான் வைத்திருந்த கருத்துக்களைச் சொல்லிவிட்டார்கள். எனினும், நான் சில கருத்துக்களை வெளியிட்டுக்கொள்கிறேன்.

'சிறிலங்கா அரசின் இயந்

(8-ம் பக்கம் பார்க்க)

## "தொகுப்புரை எமக்குத் தேவையில்லை"

(கொழும்பு)

"இந்த நீதிமன்றத்திடம் நாம் நீதியை எதிர்பார்க்கவில்லை! எங்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணியை தொகுப்புரை நிகழ்த்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறோம்!" என்று நேற்று நீர்வேலி வங்கி கொள்ளை கொலை வழக்கில் அறிக்கைகளை விடுத்த எதிரிகள் ஐவரும் வேண்டுகோள் ஒன்றினை விடுத்தார்கள்.

இவ்வழக்கில் தமது சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் சத்தியேந்திரா, சச்சிதானந்தன், குமாரலிங்கம், பாக்கியநாதன், சந்திரகாசன், சிவசிதம்பரம், கரிகாலன் ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்கள். (இ)

## பல்கலைக்கழக மாணவர் வகுப்புகளை பகிஷ்கரித்தனர்

யாழ்ப்பாணம்]

'தமிழ் பேசும் மக்கள்மீது பேரினவாத அரசின் அடக்குமுறையானது பயங்கரவாதத் தடைச்சட்ட உதவியுடன் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. இப்பயங்கரவாதத் தடைச்சட்டம், தமிழ் பேசும்

(8-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி கலந்து கொள்ளவில்லை

[கொழும்பு]

அரசியலமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது திருத்த விவாதத்திலும், வாக்கெடுப்பிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்து கொள்ள மாட்டாது என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளருமான திரு அ. அமிர்தலிங்கம் நேற்றுப் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இதன் பின்னர் தமிழர் கூட்டணி உறுப்பினர் ஒவ்வொருவராக வெளியேறினூர்கள்.

## 5-வது திருத்தம் ஏற்கப்பட்டது

[கொழும்பு]

"அரசியலமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது திருத்தத்துக்கு மூன்றில் இரண்டுபெரும்பான்மை இருந்தால், அதனை ஏற்றுக்கொள்ளலாம். பொதுஜனவாக்கெடுப்பு அவசியமில்லை" என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதாக நேற்றுப் பாராளுமன்றத்தில் சபாநாயகர் அறிவித்தார்.

பிரதமர் 5வது திருத்தச்சட்டத்தின் சட்ட மூலத்தைச்

[8-ம் பக்கம் பார்க்க]

பனை வளத் தொழிற்பாட்டு
மகாநாடு
இன்று மாலை 6-30 மணிக்கு
வீரசிங்கம் மண்டபத்தில்
கலைநிகழ்ச்சிகள்
நாட்டிய நாடகம், மட்டக்களப்பு நாட்டுக்கூத்து,
இசைநிகழ்ச்சிகள்
இடம்பெறுகின்றன.
அனைவரும் அழைக்கப்படுகின்றுர்கள்.
தலைவர்,
பனம்பொருள் அபிவிருத்திசபை.
(6332)

## "இனப்படுகொலைகளை நடாத்தும் சிறிலங்கா அரசு எங்களைப் பயங்கரவாதிகள் என்கிறது!"

### --முதலாம் எதிரி தங்கத்துரை

[கொழும்பு]

"இனவெறியைத் தூண்டி இன படுகொலைகளை நடாத்துவதன் மூலம், 'அரசியல் கூதல்காயும் சிறிலங்கா அரசு எங்களைப் பயங்கரவாதிகள் என்று வர்ணிக்கிறது சிறிலங்கா அரசு பாராளுமன்ற ஜனநாயகத்தின் அரை நூற்றூண்டு பூர்த்தியைக் கொண்டாடி இன்னொரு புறத்தில் தமிழ் ஈழத்தில் அர்த்தராத்திரியில் வீடுகளைத் தீயிட்டு, தமிழ் தலைவர்களை உயிரோடு ஒழிக்கத் திட்டமிட்ட சம்பவங்கள் இந்த நாகரீக உலகில்தான் இடம்பெற்றன."

இவ்வாறு நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கில் நேற்று அறிக்கையை விடுத்த தங்கத்துரை மேற்கண்டவாறு தமது கருத்துக்களை வெளியிட்டார்

அவர் மேலும் நீதிமன்றத்தில் குறிப்பிட்டதாவது:

"இனவெறியைத் தூண்டி, இனப்படுகொலைகளை நடாத்திய அரசு, படைப்பலத்தைக்

[8-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

3 சிலிண்டர் லம்பிறர்ரா மோட்டார் வாகனம் (Van) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் இரட்சணிய சேனை இல்லம், கண்டி வீதி, கைதடி. 6313

பாவனைக்கு உட்படுத்தப்பட்ட 300க்கு அதிகமான ஓடுகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: 677, அம்பாள் ஸ்ரோர்ஸ், ஸ்ரேசன்சந்தி, யாழ்ப்பாணம். 6312

நெல்லியடி பஸ்தரிப்புநிலைய முன்பாக உள்ள கடைக்கட்டடம் விற்பனைக்கு உண்டு. முழு விபரம் தெரிந்துகொள்ள வானதி ஸ்ரோர்ஸ், 300, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்க. 6295

வண்ணார்பண்ணை பன்றிக்கோட்டு பிள்ளையார் கோவிலிற்குரிய காணி ஆறுகால் மடத்தடிக்கு அருகில் தெற்பரப்பு 47 குளி 2 விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் இன்றிலிருந்து 14 நாட்களுக்குள் தங்கள் விண்ணப்பங்களை விலையையும் குறித்து சமர்ப்பிக்கவும். இல 418, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23441, வி. எஸ் இராமனுதர், தனாதிகாரி, தர்மகர்த்தாசபை. 6296

## தேவை

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான ஸ்தாபனத்திற்கு கீழ்க்கண்ட ஊழியர்கள் உடனடியாகத் தேவை. நம்பிக்கையும், திடகாத்திரமும் கொண்ட நடுத்தர வயதுள்ள லொறிச்சாரதி- முன் அனுபவம் விரும்பத்தக்கது. பிணைப்பணம் அவசியம். நற்சாட்சிபத்திரங்களுடன், சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட விண்ணப்பங்களை எதிர்பார்க்கும் ஊதியம் குறித்து விண்ணப்பிக்கவும். குளிர்சாதனப் பெட்டிகள் திருத்துபவர்கள் இதில் அனுபவமுள்ளவர்கள் தாங்கள் எதிர்பார்க்கும் ஊதியத்தைக் குறித்து நற்சாட்சி பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். குளிர்சாதனப் பெட்டிகள், அலுவலக இயந்திரங்கள் பழுதுபார்ப்பதில் அனுபவம் பெற விரும்புபவர்கள்- ஆற்றலுள்ளவர்களுக்கும், வேலைபழகும் காலத்திற்கு ரூபா இரண்டாயிரம் செலுத்த விருப்பமுள்ளவர்களுக்கும் மாத்திரமே முன்னுரிமை வழங்கப்படும். சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட விண்ணப்பங்களை, நற்சாட்சி பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 6286

## காணவில்லை

புதன் காலை ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தடியில் போட்டோ அல்பம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். விலாசம்: 527, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 6318

## கல்வி

C. E. I. Part I. 2 May 1984 (London Engineering) வார. வார இறுதி வகுப்புகள் 9-3-83 அன்று 4 மணிக்கு ஆரம்பமாகின்றது இருபாலாரும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி, JAST. 22, இராமையாச்செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம் 6276

## பயிற்சி

Montessori Diploma Teachers Training Course (பாலர் பயிற்சி வகுப்பு 5-3-83 ஆரம்பமாகவுள்ளது 28-2-83க்கு முன் விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, 73 ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 6310

றேடியோ. டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங் எலக்றிக்கல் வயறிங், மோட்டார் மெக்கானிசம், Hotel Management, English செய்முறைப் பயிற்சிகளுடன் மீண்டும் ஆரம்பம் 27-02-83. விபரம் நேரில், The School of Computer Studies 52/1, கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் றெக்கோடிங் பார் மேல்மாடி) ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 6228

## வகுப்புகள்

அரசாங்கத்தால் ஒரேயொரு தனியார் நிறுவன சிரேஷ்ட பாடசாலையென அங்கீகரிக்கப்பட்டது. இக் கல்லூரியில் G. C. E. (O/L), G. C. E. (A/L), Steno-Pitman Exam London Institute of Book-Keepers London, G. S. Q. (Bio); G. S. Q. (Physical & Maths) B. sc (Bio); B sc (Physical & Maths) வரையில் நடைபெறுகிறது. இக்கல்லூரியில் விஞ்ஞான செய்முறைகள் பட்டதாரிப் படிப்புக்கேற்ற முறையில் விஞ்ஞான கூடம் அமைக்கப்பட்டுள்ளது. The Principal, The College of Higher Studies, 73 Point Pedro Road, Anaipanthy, Jaffna 6309

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற பருத்தித்துறை கணபதிப்பிள்ளை செல்வராசாவின் மரண சாதன மரணச் சொத்து விடயமாய்:-

1. கணபதிப்பிள்ளை சரசுவதி
தினம் - சாவகச்சேரி
2. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு - பருத்தித்துறை
மனுதாரர்கள்

மரணசாதன)
) - இல. 1159
நியாயாதிக்கம்)

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துடன் இறுக்க வகையற்ற மரணச்சொத்தாக நிருவகிக்கப்படுவதற்காக மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுஅதற்கிணங்க அதில் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் ஆள் 1983ம் ஆண்டு பங்குனி மாதம் 4 ஆம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் ஏதேனும் இருப்பின் அதனைக்காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார். 1983 மாசி 18ந் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி
கே. செல்வராஜா
பதிவாளர்

என்னால் தயாரிக்கப்பட்டது
மு. ஈஸ்வரபாதம்
ம. சட்டத்தரணி

(6271)

## குத்தகைக்கு

No 1 அலை, 25 H. P. மோட்டார் 16 முனை அடிக்கக்கூடிய பொயிலர், தனித்தனி 54 முனைகள் கொள்ளக்கூடிய தொட்டிகளுடனும், குத்தகைக்கு உண்டு. விபரங்கட்கு K. பாலகிருஷ்ணராசா, பாலபவனம் வதிரி, கரவெட்டி [மாலி சந்திக்கும் - வதிரிச்சந்திக்கும் இடையில்] (6293)

## WANTED

Wanted immediately a Well experienced Accounts Clerk With minimum of 10 Years experience. Conversant wlth Labour payments and preferably with Industrial experience. working knowledge in English. Typing will be an added qualification. Salary negotiable. Apply before 28-2-1983. to the Managing Director, Vimal Aluminium Limited, Kayts Road, Allaipiddy. 6291

## அந்தியேட்டி அழைப்பு



திருமதி
சண்முகலிங்கம்
இராசலட்சுமி

மலர்வு: 24-9-1954
உதிர்வு: 28-1-1983

சுன்னாகம்
ஏழாலை மேற்கு
புன்னாலைக்கட்டுவன் வீதி

இராசலட்சுமி தச்சுவேலைத் தொழிற்சாலை உரிமையாளர் திரு. அ. சண்முகலிங்கம் (கட்டி) அவர்களின் அன்புமனைவி திருமதி இராசலட்சுமி அவர்கள் 28-1-1983 உலகு நீத்தமை தொடர்பான அந்தியேட்டிக் கிரியை 27-2-1983 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் கீரிமலையிலும் வீட்டுக் கிரியைகள் அன்று பி. ப. ஒரு மணிக்கு கோட்டைக்காடு மல்லாகத்திலுள்ள அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.

உறவினர்களும் நண்பர்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி வைபவங்களில் பங்குபற்றி சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன்: அ. சண்முகலிங்கம் (கட்டி).
மக்கள்மார்: சிவனுதன்,
தவனுதன்,
பெகனுதன்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.
24-2-83. 6314

## வயோதிபர் பலி!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நேற்று முன்தினம் காலை நடந்த பஸ் விபத்தில் சைக்கிளில் சென்ற இராசதுரை என்பவர் [55வயது] பலியானார்.

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



செல்வி செ. இராசேஸ்வரி மகளிர் முழுத்தகுவ் பூநகரி)
தோற்றம்: 22-11-1959 மறைவு: 4-10-1982

எங்குதான் நீ சென்றுயோ? எம்மை எல்லாம் ஏங்கவிட்டு ஆரும் அறியாது அகாலமாக நீ அணைந்துவிட்டாய் வீட்டில் விளக்கின்றி விழப்புகிறோம் தார்கொண்டு.

எமது புதல்வியின் இறுதிக்கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறியவர்களிற்கும் பலவிதத்திலும் உதவி புரிந்தவர்களிற்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மேலும் 27.02.1983ல் எமதுஇல்லத்தில் நடைபெறஇருக்கும் சபிண்டிக்கிரியையிலும் கலந்துகொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
பிரிவால் வாடும்
தாயார் செ. பத்மாவதி
சகோதரர்கள்: செ. கந்தசாமி
செ. சுந்தரலிங்கம் (C.O.)
தம்பிராய்,
பூநகரி. செ. கனகலிங்கம், செ. பஞ்சலிங்கம்.
6311

## ஓராண்டு நினைவு அஞ்சலி

செல்வன் கந்தையா மதியாபரணம் (மதி)

[இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன உப அஞ்சல்நிலையம், மண்டைதீவு]



மலர்வு: 20-5-1951 உதிர்வு: 25-2-1982

நித்தம் உன் பிரிவை நினைத்து கலங்குகின்றோம்
நீயில்லாமல் நாம் நிர்க்கதியாகிவிட்டோம்
ஏன் எம்மை விட்டுச் சென்றாய் - தொலைவழி
போகினும் உன் நினைவு ஒவ்வொருவரின்
உள்ளத்திலும் நிலைத்திருக்கும் - உன் ஆன்மா
சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

உன் பிரிவால் துயருறும்
28, ஆசீர்வாதப்பர் வீதி, அன்புத் தாய் தந்தை
நல்லூர் சகோதரர்கள், மாமன்மார்,
யாழ்ப்பாணம். மச்சாள், உறவினர்கள்.
[6317]

# மோல்டா விமானக் கடத்தல் 'நாடகம்' முடிவடைந்தது!

## பயணிகள் விடுதலை! கடத்தல்காரர்கள் சரண்!!

லண்டன் பெப் 24

கடந்த நான்கு தினங்களாக இடம்பெற்று வந்த லிபிய விமானக் கடத்தல் நாடகம் மோல்டா தீவில் நேற்றுடன் முடிவடைந்தது

கடத்தல் காரர்கள் பயணிகளையும், சிப்பந்திகளையும் விடுதலை செய்ததுடன் மோல்டா உள்துறை அமைச்சரிடம் தாமும் சரணடைந்தனர்

கடத்தல் நாடகத்துக்குள்ளான லிபிய விமானம் கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து கடத்தல் காரரின் கையிலிருந்தது. இந்த விமானம் போயிங் 727 ரக பயணிகள் விமானமாகும். லிபியாவில் உள்நாட்டுச் சேவையில் ஈடுபட்டிருந்தபோதே இவ்விமானம் கடத்தப்பட்டு மோல்டா தீவுக்குக் கொண்டுவரப்பட்டது.

கடத்தல்காரர்கள் விமானக் கதவுகளைத் திறந்து சகலரையும் வெளியேற்றியபோது பெண்கள் முதலிலும் தொடர்ந்து ஆண்களும் இறுதியாக கடத்தல்காரர்களும் கீழே இறங்கினர்.

அசௌகரியங்களுக்குள்ளான பயணிகள் உடனடியாக வாகனமொன்றில் மோல்டாவில் உள்ள ரோயல் ஆங்கில வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கடத்தல்காரர்கள் விமானத்திலிருந்து இறங்கியதும் கீழே நின்ற மோல்டா உள்துறை அமைச்சரை முதலில் நாடினர். பின்னர் அவருடனேயே ஒரேகாரில் விமான நிலையத்தின் கட்டுப்பாட்டுக் கோபுரத்தை நோக்கிச் சென்றனர். அங்கு சென்ற பின்னரே கடத்தல் நாடகம் முடிவடைந்திருப்பதும் கடத்தல்காரர்கள் சரணடைந்திருப்பதும் அறிவிக்கப்பட்டது.

மோல்டா விமான நிலையத்தில் தொலை தூரத்தில் உள்ள ஒரு பாதையொன்றிலேயே அந்த 'போயிங்' விமானம் கடத்தல் காரரால் நிறுத்தப்பட்டிருந்தது. விமானத்தை கடத்தல்காரர்கள் மேலெடுக்க முடியாதவிதத்தில் ஓடுபாதைகளில் இராணுவ வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

கேந்திர நிலைகளில் கொமாண்டோ வீரர்களும், குறிபார்த்துச் சுடும் வீரர்களும் கடத்தல்காரரை மடக்கும் விதத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர்.

தற்செயலாக விமானம் நாசமாக்கப்படும் பட்சத்தில் விபரீதங்கள் ஏற்பட்டுவிடாதிருக்கும் வகையில் முதலுதவி தீயணைப்புப் படைகளும் தயாராக நின்றிருந்தன. (கி)

---

### தென்கொரியாவில்

# மாணவி ஒருவருக்கு மரண தண்டனை!

லண்டன், பெப். 24

தென்கொரியாவில் அந்த நாட்டு மாணவி ஒருத்திக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கிம் யோங் ஹீ என்ற 26வயதான அந்த மாணவி தனியார் கல்வி நிறுவனமொன்றில் பயின்று வருகிறார். தென்கொரிய அரசியல் விவகாரங்களை வட கொரியாவிற்குக் கடத்தினர் என்றே அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

இத்துடன் சமய நிறுவனங்களையும், மாணவர்களையும் குழப்பிவிட்டு சமூக அமைதியின்மைக்கு அவர் வழிசெய்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வேறும் மூவரும் அந்தப் பெண்ணுடன் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். ஆனால் அவர்களுக்கு மூன்று வருடங்களிலிருந்து ஆயுள்காலம் வரையிலான சிறைத் தண்டனையே விதிக்கப்பட்டது.

இத்தண்டனைக்குள்ளானவர்களில் ஒருவர் அந்த மாணவியின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

---

## "பிரிவினை வகுப்புவாத சக்திகளை வளரவிடக்கூடாது!"

புதுடில்லி, பெப். 24

'நாட்டில் பிரிவினை, வகுப்புவாத சக்திகளுக்கு இடமளிக்கக் கூடாது' என்று இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் நேற்று அரசை வற்புறுத்தினர்.

இந்த உறுப்பினர்கள் லோக, ராஜ்யசபை ஆகியனவற்றைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இவர்கள் ஜனாதிபதி ஸெயில் சிங் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை வரவேற்றனர். இத்துடன் அந்த உரை பிரிவினை, வகுப்புவாத சக்திகளை மேலும் சாடுவதாக இருந்திருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

பொருளாதாரத் துறையில் வளர்ந்துவரும் நாடான இந்தியாவில் வகுப்புவாத, பிரிவினை சக்திகள் தலையெடுப்பதை அனுமதிக்கக் கூடாது. அவ்வாறு அனுமதித்தால் நாட்டில் அமைதியின்மையும், மந்தமான பொருளாதாரமும் ஒரு தொடர்கதையாக இருக்குமென்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (கி)

---

# பிரிட்டனின் முதலாவது பெண் ரயில் சாரதி!

லண்டன், பெப் 24

இங்கிலாந்தில் பெண்மணி ஒருவர் ரயில் சாரதியாக கடமையேற்றுள்ளார்! இங்கிலாந்தின் 175 வருட ரயில் சேவையில் பெண்மணி ஒருவர் ரயில் சாரதியானது இதுவே முதல் தடவையாகும்!

ஆன்வின்ரர் என்ற 23 வயதுப் பெண்ணே அந்த சாரதியாவார் இவர் மூன்று வருடங்கள் ரயில் சாரதிக்கான பயிற்சி பெற்றிருந்தார். இப்பயிற்சியில் சேர முன்னர் மிருக வைத்திய தாதியாக இவர் இருந்தார்

"தினமும் ரயில்கள் ஓடுவதைக் காணும்போது ஏன் அவற்றை நான் இயக்கக்கூடாது? என எண்ணத் தோன்றியது"

இதையடுத்தே ரயில் சாரதியாகப் பயிற்சிபெறத் தொடங்கினேன் என்றார், ஆன்வின்ரர்

அவர் மேலும் "பயிற்சியில் சேர்ந்தபோது ஏனைய ஆண்கள் என்னை வேடிக்கையாகப்பார்த்தார்கள். இப்போ நான் அவர்களுடன் ஒருவராகியுள்ளேன்" என்றார். (கி)

---

## லெபனானில் கடும்பனி

# 70 பேர் பலி!

பெய்ரூட் பெப் 24

லெபனானில் பெய்ரூட் நெடுஞ்சாலைகளில் கடும்பனி வீழ்ச்சி காணப்படுகின்றது இப் பனிப் பொழிவுக்கு இது வரை 70 பேர் அங்கு பலியாகியுள்ளனர். நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

லெபனான் ஹெலிகாப்படர்களும் டிரக் வண்டிகளும் பாதிப்படைந்தவர்களை மீட்பதில் ஈடுபட்டுள்ளன. இவற்றுடன் லெபனானில் தங்கியுள்ள ஐ. நா. சமாதானப்படை வீரர்களும் மீட்புப்பணிகளில் இறங்கியுள்ளனர்.

குவியல் குவியல்களாக பனி வீழ்ச்சி பாதைகளை மூடியும் கட்டிடங்களுக்கு மேல் வீழ்ந்தும் காணப்படுகின்றன. சில இடங்களில் மீட்புப் பணிகளை தொடரமுடியாதவிதத்தில் பனிக்கட்டிகள் இறுக்கமடைந்துள்ளனவென்றும் தெரிவிக்

[7-ம் பக்கம் பார்க்க]

---

# பிரிட்டனில் குடியேற்ற எண்ணிக்கை அதிகரிப்பு!

லண்டன் பெப் 24

பிரிட்டனில் குடியேறுபவர்களது எண்ணிக்கை அதன் மொத்த சனத்தொகையான 54 கோடியில் 13 சதவீதமாக இருந்து 3,374,000 ஆக அதிகரித்துள்ளது!

1971க்கும் 81க்கும் இடைப்பட்ட காலத்திலேயே இந்த அதிகரிப்பு என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுநலவாய நாடுகளிலிருந்து பிரிட்டன் வருவோரின் எண்ணிக்கையே கணிசமாக இருக்கிறது! பாகிஸ்தான்காரர்களது குடியேற்ற எண்ணிக்கை 32சதவீதத்திலிருந்து 1,57,000 ஆக உயர்ந்துள்ளது! (கி)

---


இப்போது கையிருப்பில் உண்டு.

தரம் சிறந்த, விலை குறைந்த

## சென்ட்ரிக் N100 வீட்டுபயோகப் பம்பு

தரச் சிறப்புகொண்ட சென்ட்ரிக் வகையருக்களுள் இது ஒரு புதிய ரகம், ஆம், தரமான இப் பம்பு மிகமிக் குறைந்த விலையில் கிடைக்கிறது

தரமான பொருள்கொண்டு, கைதேர்ந்த வேலைப்பாட்டில் உருவாக்கப்பட்டது சென்ட்ரிக் N100, இதற்கான மோட்டரும் பம்புக்கு ஈடுகொடுக்கும் வகையில் அமைந்தது, எல்லா சென்ட்ரிக் பம்புகளையும் போலவே N 100 பம்பும் தரம் குன்றாது நேர்த்தியாக உருவமைக்கப்பட்டுள்ளது, சென்ட்ரிக் N 100 ஆண்டாண்டு காலம் தொல்லையில்லாத சேவை புரிவதற்கு இதுவே உத்தரவாதம்.

★ கடின உழைப்புதரும், முற்றிலும் மூடப்பட்ட, விசிறியில் குளிராகும் இன்டக்ஷன் மோட்டர்.


★ வார்ப்புப் பித்தளை இம்பெலர் சகிதம் கடின உழைப்பு தரும் வார்ப்பிரும்பு பம்பு.


CENTRIC

ரூபா 1,850/-



### சென்ட்ரிக் - ஒரு சீவிய கால முதலீடு.





சிறந்த பராமரிப்புச் சேவையுண்டு.

ஜினசேன லிமிட்டெட்,

4, ஹுணுப்பிட்டிய ரோட்,

கொழும்பு 2. தொலைபேசி: 26553 - 9

75 YEARS JINASENA LIMITED

Mel Ads

### மணிவாக்கு

"ஒருவன் ஒன்றுமே செய்யாதிருக்கும் வேளைகளில் எல்லாவற்றுக்குமே தாம்தான் பொறுப்பு என்று எண்ணிக்கொள்கிறன்".

—ஜீன்-பால்-சாட்டர்

# நமது நோக்கு

## எங்கே செல்கிறோம்!

கோப்பாய்த் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆலாலசுந்தரம் இளைஞர்களால் சுடப்பட்டு கடுமையான காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதானது பொதுவாழ்வில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பெரிதாக மதிக்கும் எந்த ஒரு மனிதனுக்கும் அதிர்ச்சியை மட்டுமல்ல, அங்கலாய்ப்பையும் அளிக்கும் செய்தியாகும்.

மக்கள் பிரதிநிதியொருவர் சுடப்பட்டிருப்பது அதிர்ச்சிக்குரிய காரணம் என்றால் எந்த விடயத்திற்கும் துப்பாக்கியால் தீர்ப்புக்கூறுவது என்ற இளைஞர்களின் இன்றைய போக்கு அங்கலாய்ப்புக்குரியது.

அரசியல் சமூகப் பிரச்னைகளை 'துப்பாக்கி முனையில்' தீர்த்துவிடலாமென்ற நம்பிக்கையில் நமது இளைஞர்களில் சில பிரிவினர் சமீபகாலமாக நடவடிக்கைகளில் இறங்கியிருப்பது நாடறிந்த விடயம்.

இப்படியான ஒரு நிலைக்கு இளம் தலைமுறையினர் ஏன் தள்ளப்பட்டார்கள் – எப்படித் தள்ளப்பட்டார்கள் என்பதை ஆராய்வது இப்போது உசிதமல்ல.

ஆனால் தமிழ் தேசிய இனத்தின் பிரச்னைகளை – அவை அரசியல் சமூக அல்லது வேறு எவையானாலும் – மக்கள் பலத்தின் மூலமே தீர்க்கப்பட முடியும் என்பதில் எவருக்கும் சந்தேகம் எழ முடியாது. மக்கள் பலத்தை துப்பாக்கி முனையால் உருவாக்க முடியும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

திரு ஆலாலசுந்தரம் எவ்வாறாயினும் ஒரு சாதாரண மனிதரல்ல. அவர் ஒரு தொகுதியின் மக்கள் பிரதிநிதி பொதுவாழ்வில் நெடுங்காலம் தொடர்புள்ளவர். சமூக, அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டு உழைத்தவர். தமிழர் விடுதலைக்கூட்டணியின் தீவிர ஊழியர்களில் ஒருவர், தேர்தல் கால பிரசார பீரங்கி, இதுமட்டுமல்ல தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பும் உள்ளவர்.

பாராளுமன்ற பதவியை ஏற்கும்முன்பிருந்தே யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக இருந்து வருகிறார்

இந்தச்சங்கத்தின் சில நிர்வாக சீர்கேடுகள் – கணக்கு வழக்குகள் பற்றிய குற்றச்சாட்டுகளும் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் சில நாட்களுக்குமுன் யாழ்நகரிலும் மேற்படி சங்கப்பணிமனையிலும் புலிப்படையின் குறியீட்டுடன் சில இளைஞர்களால் விநியோகிக்கப்பட்டுள்ளன,

இப்போது நடைபெற்றுள்ள துப்பாக்கிப்பிரயோகத்துக்கும் மேற்படி சங்கப் பிரச்னைகளுக்கும் சம்பந்தமிருக்கலாம என்பது பொதுவான கருத்து. துப்பாக்கியால் சுட்ட இளைஞர்களும் இதுவிடயம் பற்றியே திரு. ஆலாலசுந்தரத்துடன் காரசாரமாக வாதாடியிருக்கின்றார்கள் என்று செய்தி கூறுகின்றது

ஒரு மக்கள் பிரதிநிதியை சுட்டுக் காயப்படுத்துவது அல்லது சுட்டுக் கொலை செய்ய எத்தனிப்பதென்பது சாதாரணமான விடயமாகக் கருதிவிட முடியாது. சமூகத்தில் புரையோடிப் போய்க் கிடக்கும் ஊழல்களை ஒருஅரசியல் வாதியை – மக்கள் பிரதிநிதியைச் சுடுவதின் மூலம் தீர்த்துவிட முடியும் என்று இளைஞர்கள் கருதுகிறார்கள்போலும்!

'இளைஞர்களின் வன்செயல்கள் எங்கோ ஆரம்பித்து தங்கள் தலைவர் ஒருவரையே குறிவைக்கும்' அளவுக்கு திசை திரும்பி விட்டதே என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு அமிர்தலிங்கம் மிகவும் வேதனைப்பட்டு இச்செயலைக் கண்டித்திருக்கிறார்.

"வளர்த்த கடா மார்பில் பாய்கிறது" என்று ஒரு பழமொழியும் தமிழில் உண்டு. இளைஞர்களின் துணிச்சலும் வீரமும் பாராட்டப்படும் போது அதனை அவர்கள் "தீட்டிய மரத்தில் கூர் பார்க்கும்" காரியத்துக்குப் பயன்படுத்தலாகாது.

அரசும், அரச பரிவாரங்களும் மேற்கொண்ட அட்டூழியங்களைக் குறித்து அவலக் குரல் எழுப்புகின்ற நாம், அநியாயச் சட்டங்களின் கீழ் நமது இளைஞர்களை, மதகுருமார்களை, சமூகத் தொண்டர்களை கைது செய்து காவலில் வைப்பதைக் கண்ணீர் வடித்துக் கதறியழுது கண்டிக்கும் நாம், சாதாரண சட்டங்களின் கீழ் அவர்களை விசாரணை செய்யும்படி கோரிக்கை விடுக்கும் நாம், நமது அரசியல் பிரமுகர்களை (அவர்கள் எந்தக்கட்சியைச் சேர்ந்தவரானாலும்) எதுவித விசாரணையும் இன்றி துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தி அல்லது சுட்டுக்கொலைசெய்ய எத்தனித்து தண்டிப்பதற்கு எந்தவகையில் உரிமையுடைவராவோம் என்பதை இச்செயல்களில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் சிந்திக்க வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரை வன்முறை அது எந்தரூபத்தில் எங்கிருந்துவந்தாலும் ஆணித்தரமாகக் கண்டித்து வருகின்றோம். இலட்சியம் புனிதமானதாயின் அதை நோக்கிய வழியும் புனிதமாய் இருத்தல்வேண்டும். வன்செயல்கள் ஒருபோதும் நற்பயனை அளிக்கமாட்டாது என்பதே மகாத்மா காந்தி போன்ற பெருமக்களின் அனுபவாச்கு.

தமிழ் மக்களின் ஏகோபித்த ஒற்றுமையிலேயே அவர்களின் இலட்சியம் நிறைவேறமுடியும். இக்கருத்தையே கூட்டணித் தலைவர் திரு சிவசிதம்பரமும் வலியுறுத்தியிருக்கிறார். மக்களை கிலி கொள்ளச் செய்தும் அங்கலாய்க்க வைத்தும் ஒற்றுமையை ஏற்படுத்தமுடியாது.

இன்றைய தங்கள் நிலைமைக்கு பழைய தலைமுறையினரைக்குறைபாடும் இளைஞர் சமுதாயம், அதேகுற்றச்சாட்டுக்குத் தாமும் உள்ளாகிவிடாது நிதானமாகவும் தீர்க்க சிந்தையோடும் செயல்படவேண்டிய காலமிது. ஏனெனில் குட்டையைக் குழப்புவதற்கென்றே சிலரும் அங்கு வேட்டையாடவென்றே பருந்தும் காத்திருக்கின்றனர்.

வடமராட்சியின்

# வளர்ச்சிப்பாதையில் கால்நடைவளர்ப்போர் சங்கம்

[வடமராட்சிப் பிரதேச கால்நடை வளர்ப்போர் சங்கம் நடத்தும் பால் சேகரிக்கும் நிலையத் திறப்பு விழா இன்று]

வடமராட்சிப் பிரதேசக் கால் நடை வளர்ப்போர் சங்கம் வட மராட்சி வடக்கு–கிழக்குப்– பிரிவுக்கு – பருத்தித்துறைத் தொகுதியில் உதவி அரசாங்க அதிபராக இருந்த ஒருவரால் கால்நடை வளர்ப்போரின் வேண்டுகோளுக்கு அமைய அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு 1976ல் இருந்து இயங்கிவருகின்றது இது நன்றாக இயங்கவும், சேவைசெய்யவும், அதனால் அங்கத்தவர்களின் பொருளாதார வருமானத்தை உயர்த்தவும். புதிய வேலைவாய்ப்புகளைப் பெற வழி கோலவும் அங்கத்தவர்களை நியாயமான அளவில் புதிதாகச் சேர்க்கவேண்டும்.

இயக்கம் தனியே தலைமையில் தங்கியிருப்பதில்லை. அங்கத்தவர்களிலும் ஆதரவாளர்களிலும் தங்கியுள்ளது இயக்கம் நல்லதாக இருக்கவேண்டுமாயின் தூண்டுவாரின்றி, இயங்கிக்கொண்டிருக்க வேண்டும். இயக்கம் பலம்கொண்டதாக, உறுதியுடையதாக வளர்வதற்காக உண்மையாகக் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர், ஈடுபட விரும்புவோர் அங்கத்தவர்களாகவேண்டும். எனவே அங்கத்தவர்களைச் சேர்க்கும் பாரிய திட்டத்தில் சங்கம் இறங்கியுள்ளது. ஆடு, பசு மாடு, கோழி, தாரா, முயல், நல்லின நாய்கள் வளர்ப்போர் முன்வந்து அங்கத்தவர்களாகவேண்டும். அங்கத்தவர்கள் இன்றி, பொது நன்மைகளை விரும்புவரின்றி – சமூக பொருளாதார அமைப்புகள் உருவாகா. எனவே எமது பொருளாதார வளத்தை மேம்படுத்த இச்சங்கத்தினையும் ஒரு கருவியாக, வழிடாகப் பாவிக்க வேண்டும்

### நன்மைகள்

1 நல்ல இன பசுக்கன்றுகள், ஆடுகள், கோழி, தாராக்குஞ்சுகள் வழங்குவதல் அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல். இதனைக் கால்நடை வைத்தியா நிறைவேற்றுவார்.

2 கடைகள் நிலையங்களை வெவ்வேறு இடங்களில், வசதியான போக்கு வரத்துக்கு எட்டக்கூடிய இடங்களில் ஸ்தாபித்தல்.

3. மாடு, ஆடு விலைக்கு வாங்க 5000/-க்குறையாத கடன் வழங்குதல்; குறைந்த சலுகை விலை வட்டி.

4. கடன் பெறுவதற்கு வருமானவரி, உயர்ந்த சம்பளம் பெறுவோர், செல்வ வரிகட்டும் இருவரைப் பிணைகாரராகப் பெறுவதற்குப் பதிலாக, இரு அங்கத்தவர்கள் பிணை நிற்றல்; சங்கத்தின் சிபார்சில் கடன் வழங்குதல்.

5. முட்டை, பால் சேகரிப்பது, சந்தைப்படுத்துவது, கொண்டுசெல்ல வாகனவசதி சேகரிப்பாளர்களை நிர்ணயிப்பது

சந்தையில் விலைகளை நியமிப்பதில் பெரும் பங்கு எடுத்தல்; விலைத் தளம்பலைக் குறைத்தல்.

த. மார்க்கண்டு

6. பாலை உள்ளூரில் சேகரித்து உள்ளூரில் மத்திய இடங்களில் பால் விற்பனைச் சாலைகளை அமைத்தல்; அங்கிருந்து பாலை விற்றல்; மிகுதிப் பாலை இங்கு நேரடியாகவோ அல்லது சேகரிப்பாளர் மூலமோ சேர்ப்பிக்கலாம்.

திருநெல்வேலி, கிளிநொச்சிக்குப் பால் கொண்டுபோய்க் கொடுத்தல் பாற்சபையின் அனுசரணையுடன் நடத்தப்படும்.

7. குறைந்த, நியாயமான விலையில் தரமான கால்நடைத் தீனிகளையும், கால்நடை மருந்துகளையும் விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்து விற்றல்.

பிரதேசத்தில் மத்தியிலான பல இடங்களில் விற்பனைக் கிளைகளையும், கொள்வனவு சேகரிப்புக் கிளைகளையும் உண்டாக்குதல்.

8. கால்நடை அபிவிருத்திக்குப் பயிற்சிபெற வெளிநாடுகட்கு அமைச்சுமூலம் அனுப்புதல் – அரசாங்கமே தனது செலவில் அனுப்பும்.

பல இனப்புல்லுகளை நட்டு வளர்க்க, திருடப்பிக்கொடாதடன் கொடுத்தல் மானியம் வழங்கப்படும்,

10 ஆடு, மாடு, செம்மறி ஆடுகளுக்கு மேய்ச்சல் நிலம் ஒதுக்கிவைத்தல்.

11 எங்கள் சுவாத்தியம் காலநிலைக்கு ஏற்று கால்நடைகளை விருத்தி செய்தல், அவை அழிந்து போகாமலும், அருகிப்போகாமலும் பார்த்தல்.

12 பன்றிப் பண்ணையை ஆரம்பித்தல், இதனால் குறைந்த காலத்தில் அதிக வருமானம் பெறலாம்,

13. கால் நடை வைத்தியரைக் கொண்டு நடமாடும் வைத்திய சேவையை ஆரம்பித்தல், இன்னும் அநேகம்.

கடந்த காலங்களில் சங்கம் அவ்வப்போது பல பயனுள்ள சேவைகளை ஆற்றியுள்ளது. சங்கத்தோடு நெருங்கியவர்கள் இதனை அறிவர்.

சேவை மூலம்தான் தலைமையின், நிர்வாக சபையின் திறமையை அங்கத்தவர்கள் நம்பி உற்சாகம் அடைந்து இதனை மேலும் மேலும் வளர்க்க முன்வருவார்கள்.

ஒவ்வொரு கிராம சேவை அலுவலர் பிரிவிலும் செயலாற்றும். நிறைவேற்றும் குழுக்கள் அமைக்கப்படவேண்டும்

இச்சங்கம் இப்பகுதியில் கால் நடை அபிவிருத்திக்கான சமூக பொருளாதார புள்ளி ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளுதல் அவசியம். இதற்கு வேண்டிய ஆலோசனை, உதவிகளை யாழ்ப்பாணம் கச்சேரி திட்டப்பிரிவு, இலங்கைப்பல்கலைக்கழகப் புவியியல் பிரிவு பொருளாதாரப்பிரிவு ஆகியவற்றில் இருந்தும் பெறமுடியும். வேறும் சில உதவிகளை மில்க்வைற் தொழிலக உரிமையாளர் திரு. க. கனகராசாவிடமிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும். அவரும் இச்சங்கத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டியுள்ளார்.

இச்சங்கத்தின் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பீடத்தின் விலங்கியல்

[5ம் பக்கம் பார்க்க]

தவக்கால நற்சிந்தனை



### கேளுங்கள் தரப்படும்

வாழ்க்கை என்பது துன்பமும் துயரமும் நிறைந்தது. அந்த வாழ்க்கையில் எமது ஆசைகளும், தேவைகளும் அதிகம். எமது வாழ்க்கையிலே "கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும். தேடுங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும்,' என்ற உமது வார்த்தைகளின் படி வாழ உதவி யருளும். மற்றவர்கள் எமக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்கிறோமோ அதையே நாம் மற்றவர்களுக்கு செய்ய மனதுணிவைத்தருளும் மற்றவர்கள் எங்களிடம் கேட்பதைக் கொடுக்கவும் எங்களிடம் உள்ளதை பகிர்ந்து கொள்ளவும் துணைபுரியும்.

அருட்செல்வன் ம. ரூபன்

# கிளிநொச்சியில் இன்று இலவச கண்சிகிச்சை

அதிமுக்கிய மனித உறுப்பாக அமைந்த கண்ணில் ஊனமுற்றோர்க்கு உதவ உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாடுகளிலும் பல்வேறு நிறுவனங்கள் இயங்கிவருகின்றன. அந்தவகையில் இலங்கை 'ஐ கெயர்' நிறுவனம் இலங்கையில் அமைந்துள்ளது. இன்று அதன் மாபெரும் சத்திரசிகிச்சை நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெறுகிறது. கண்ணில் சவ்வு படர்தல் மூலம் பாதிப்புக்குள்ளாகின்ற இரண்டாயிரத்துக்கும் அதிகமானவர்கள் இதனால் இன்று பயன்பெறவிருக்கின்றனர்.

கொழும்பு கண் வைத்திய சாலை மருத்துவ தாதிகள், வானங்கள் உதவியுடன் கூடிய 19 வைத்தியநிபுணர்களைக்கொண்ட குழு வைத்தியகலாநிதி வீரசிங்கா தலைமையில் இயங்குகிறது, அமெரிக்கா, ஸாம்பியா நாடுகளின் கண் நிபுணர்களும் இதில் அடங்குவர். பரந்தன் சுகாதார பகுதியில் அடங்கும் பரந்தன், கிளிநொச்சி, [illegible]தபுரம், பூநகரி, பளை, செம்பியன்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் இல்லந்தோறும் கண் பாதிப்புக்கு ஆளானவர்கள் பெயர் காந்திய தொண்டர்களால் சேகரிக்கப்பட்டது. செம்பியன் பற்று, பூநகரி, பளை, கிளிநொச்சி வைத்திய சாலைகளில் தெரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இன்று சத்திரசிகிச்சை அவசியமான இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோருக்கு இலவசசேவை வழங்கப்படுகிறது.

கிளிநொச்சி, பரந்தன் ரோட்டறிக்கழகம் இம் முகாமை இங்கு ஏற்பாடுசெய்துள்ளது.

ஒரு அதிஅவசியமான பணி தத்தம் பகுதிகளில் நடைபெற அனைத்து சேவையாளரும் முன்வரவேண்டும். கிளிநொச்சி ரோட்டறிக்கழக செயற்பாடு அனைத்து பிற பகுதி நிறுவனங்களுக்கும் ஒரு முன்மாதிரியாக அமையட்டும்.

வை. ஜெயபாலன்
(ரோட்டறிக்கழகம
கிளிநொச்சி).

# ஜீப் குடைசாய்ந்து இராணுவத்தினர் 3 காயம்

(யாழ்ப்பாணம்)
ஜீப் குடைசாய்ந்ததால் மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர்.

பி. ஜி ஜயவீர (42-வயது), பி. எச். விக்பேட் (25-வயது), ஜீ. டி. சுமணபால (42 வயது) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர்கள் யாழ். நகர் வருகையில் ஜீப்ரடர்கள் காற்றுப்போனதால் இவ்விபத்து ஏற்பட்ட 3 இராணுவத்தினர்களும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (ப.ந)


மாபெரும்

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

இடம்: யாழ். மாநகர சபை மண்டபம்.
காலம்: 27-2-1983 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம்
1-3-1983 செவ்வாய்க்கிழமை வரை
தினசரி காலை 8-30 மணி தொடக்கம்
மாலை 7-00 மணி வரை

யாழ். அரசாங்க அதிபர் தேவநேசன் நேசயா அவர்களால் திறந்துவைக்கப்படும்

★ கலை ★ இலக்கியம் ★ பொருளாதாரம்
★ விஞ்ஞானம் ★ அரசியல் தொழில்நுட்பம்


முதலிய பல்வேறு துறைகளிலும், சிறுவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய:

சிறந்த நூல்கள் குறைந்த விலையில்
தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உண்டு.

சிறப்பாக: ★ சிறுவர்களுக்கு அன்பளிப்புக்குரிய அழகிய வர்ணச் சித்திரக் கதைகளும்
★ பல்கலைக்கழக மாணவர்களுக்கு அறிவு புகட்டும் நூல்களும்.

## மக்கள் பிரசுராலயம் லிமிட்.

40, சிவன்கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.
124, குமாரன் இரத்தினம் வீதி, கொழும்பு-2

யாழ் பரியோவான் கல்லூரியின் கடற் சாரணர் குழுவை உதவி ஆசிரியரான செல்வன் ப. சுதர்சன் அநுராதபுரத்தில் இம்மாதம் 27-ம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 5-ம் திகதிவரை நடைபெறவிருக்கும் 3-வது தேசிய ஜம்போரியில் கலந்து கொள்ளவிருக்கும் பரியோவான் கல்லூரிக் கடற் சாரணர் குழுவுக்குத் தலைமை தாங்கிச் செல்கிறார்.

பரியோவான் கல்லூரியின் பழைய மாணவரான இவர் சாரணியத்துறையில் எட்டு வருட கால அனுபவமும் பயிற்சியும் பெற்றிருப்பதுடன் சாரண ஆசிரியர் பயிற்சியையும் சமீபத்தில் பெற்றுச்சித்தி பெற்றுள்ளார். இந்திய அரசின் 'தொலைக்காட்சித் தொழில் நுட்பவியலாளர்' டிப்ளோமா பட்டம் பெற்றவரான இவர், சிறந்த ஓட்டப்பந்தய வீரராகவும், யாழ். லியோ கிளப்பிலும், யாழ்.முதலுதவிப் படையிலும் அங்கத்தவராகவும் இருந்து வருகிறார். [அரி. நி]

## ரூபவாஹினியில் இன்று

6 00 இன்றைய நிகழ்ச்சிகள்
6 01 – சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
7 00 – செய்தி மஞ்சரி (தமிழ்)
7 14 – நாளைய நிகழ்ச்சிகள்
7 15 'மைட்டி யுவர் லேங்கியூஜ்' (நகைச்சுவை தொடர் நவீனம்)
7. 45 – உலக சாதனைகள் புத்தகத்திலிருந்து
8 15 – சிங்கள சஞ்சிகைகள்
8 26 – நாளைய நிகழ்ச்சிகள்
8 30 – விசேட நிகழ்ச்சி (ஆங்கிலம்)
9 00 – இசைத்துறையில் முக்கியமானவர்கள் (அறிமுகம்)
9 30 – செய்திமஞ்சரி ஆங்கிலம்)
9. 45 – துப்பறியும் தொடர் நவீனம் (ஆங்கிலம்)
10 40 – இன்றைய ஒளிபரப்பு முடிவு.

பனாகொடையில்

## தமிழ் இளைஞர்கள் வேலை வாங்கப்படுகின்றனர்!

### சட்டத்தரணிகள் புகார்

(கொழும்பு)
'பனாகொடையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் பலாத்காரமாக வேலை வாங்கப்படுகின்றனர். இது நிறுத்தப்படவேண்டும்' என்று சட்டத்தரணி ஜீ. குமாரலிங்கம், சட்டத்தரணி எஸ். நவரத்தினம் ஆகியோர் கொழும்பு மேலதிக நீதிமன்றில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அவர்கள் அம்முறைப்பாட்டில் வேலைவாங்கப்படுவதற்காக தாக்குதலுக்கும் அந்த இளைஞர்கள் உள்ளாகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இப்புகாரையடுத்து உடன் விசாரணை நடத்தப்படுமென்று மேல் நீதிமன்ற நீதிபதி ரொபர்ட் சில்வா தெரிவித்தார்.

இந்த புகாரின் பிரதிகள் ஜனாதிபதி, பாதுகாப்பமைச்சர், இராணுவத்தளபதி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

பனாகொடையில் பாஸ்கரன் தேவகுமார் ஆகியோர் திருக்கோயில் வங்கிக் கொள்ளை தொடர்பாகவும், யோகராஜா இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை தொடர்பாகவும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

### விளையாட்டுப்போட்டி

(கரவெட்டி)
நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அடுத்த மாதம் 9ம் திகதி நடைபெறவுள்ளது.

### வளர்ச்சிப்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

துறைப்பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கடமை புரிகின்றார். புலோலி அரசினர் கால்நடை வைத்தியர் தம்பிப்பிள்ளை கதிரவேற்பிள்ளை செயலாளர் ஆவர். யாழ்ப்பாண வடமராட்சிப் பிரதேச கால்நடை வைத்தியரே செயலாளராவர்.


பொறுப்பான நிர்வாகசபை ஊழியர்கள் அங்கத்தவர்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள், கால்நடை வைத்திருப்போரும், கால்நடை வைத்திருந்து இடையே கைவிட்டவர்களும், புதிதாக கால்நடை வளர்ப்பில் நாட்டம் கொண்டோரும் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கால்நடைகள் மூலம் நாட்டு அபிவிருத்திக்கு உழைக்கமுன்வர வேண்டும்.


## விற்பனைக்கு

யாழ்ப்பாணம்
(I) வீடு-சிவன் பண்ணை வீதி
2 பரப்புகாணியுடன்
(II) வீடு – பணத்துறை லேன்.
2 பரப்பு காணியுடன்
(III வீடு – செட்டித்தெரு
4½ பரப்புகாணியுடன்
(IV) கடை-K K S. வீதி
¼ பரப்புகாணியுடன்
(V) வீடு-2 பரப்பு
ஸ்ரான்லி றோட்
தெல்லிப்பளை
8 பரப்பு காணி
அன்னம்மா கோவில் வீதி
சிறுப்பிட்டி
3 பரப்பு காணி
மருத்தித்துறை வீதி
வசாவிளான்
வீடு-அச்சுவேலி,
3½ பரப்புகாணியுடன்
மீசாலை
தோட்டம்-சென்றல் வீதி
70 பரப்பு
கொடிகாமம்
9 பரப்பு காணி
பருத்தித்துறை வீதி
வவுனியா
வீடு-அதிரேசு வீதி
3 பரப்புகாணியுடன்
மேலதிக விபரங்களுக்கு;
த பினான்ஸ் கம்பனி லிமிடட்
REAL ESTATE DIVISION
249, மின்சாரநிலையவீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-23680



## மீண்டும் கிடைக்கின்றது




## ஜப்பானிய பம்ப் தொழில் நுட்பமும் அமெரிக்க என்ஜினும்.

"டொக்காய்" தன்இயக்க விவசாய நீர் இறைக்கும் இயந்திரம் "பிறிக்ஸ் & ஸ்ரற்றன்" என்ஜினுடன் இணைக்கப்பட்டு இப்போது ரூ. 5200/-க்கு கிடைக்கின்றது.

★ நீர் இறைக்கும் அளவு மணிக்கு 27000 லீட்டர் (6000 கலன்)
★ மண்ணெண்ணெ கொள்வனவு மணிக்கு 0.75 லீட்டர் (0.16 கலன்)
★ மொத்த நிறை 28 கிலோ (61 றாத்தல்)
★ ஒரு வருட உத்தரவாதமும் நாடெங்கிலும் உதிரிப்பாகங்களும் கிடைக்கும்.

பொறியியல் விற்பனை, சேவைப் பிரிவு
ஹேலீஸ் லிமிட்டெட்
25, ஃபொஸ்டர் ஒழுங்கை கொழும்பு 10. தொலைபேசி 91181

Mel Ads

## தியேட்டர் ஊழியர்கள் விசாரணை

(கரவெட்டி)

பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர், சாரதி கொலைச் சம்பவம் தொடர்பாக நெல்லியடியிலுள்ள இரு சினிமாத் தியேட்டர் ஊழியர்கள் இரகசியப் பொலிஸாரினால் விசாரணை செய்யப்பட்டனர்.

ஒரு சினிமாத் தியேட்டரைச் சேர்ந்த சில ஊழியர்கள் இச் சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் நீண்ட நேரம் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் விசாரணை செய்யப்பட்டனர்.

நேற்று மற்றொரு தியேட்டரைச் சேர்ந்த ஒரு ஊழியர் பொலிஸாரினால் பருத்தித்துறையில் விசாரணை செய்யப்பட்டார்.

நெல்லியடியிலுள்ள எரிபொருள் நிலையத்தைச் சேர்ந்த ஊழியர்களும் விசாரணை செய்யப்பட்டனர்.

பருத்தித்துறையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்த சில நிமிடத்தின் பின்னர், தியேட்டர் ஒன்றில் காட்டப்பட்ட படம் நிறுத்தப்பட்டது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## பத்தாவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு தமிழ்ப்பொது பணிமன்ற சனசமூக நிலைய 10வது ஆண்டு நிறைவு விழா நாளை 26ம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலைமண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு நிலையத்தலைவர் திரு சி கஜமுகலிங்கம் தலைமை வகிப்பார். உதவி அரசாங்க அதிபர் எ.சி. செபநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

விழாக் கொண்டாட்டங்களில் நடனநிகழ்ச்சி, இன்னிசைக் கச்சேரி, வழக்காடுமன்றம் ஆகியன இடம்பெறும்.

## நயினை அம்பாள் மாசிமக உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலில் மாசிமக உற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும்.

காலை பத்து மணிக்கு சங்காபிஷேகம் விசேட பூசை ஆகியன நடைபெறும்.

## உடும்பு என்று நினைத்து பாம்பு பிடித்த கதை!

(மட்டுவில்)

உடும்பைத் துரத்திச் சென்றவர் பாம்பைப் பிடித்தார்!

இச்சம்பவம் மட்டுவில் தெற்கில் நிகழ்ந்துள்ளது.

மட்டுவில் தெற்கைச்சேர்ந்த நால்வர் மகிளடி தவறணையில் நிறைய மது அருந்தினர். அங்கு ஒருவர் ஓர் உடும்பை விற்பனைக்காக தவறணைக்குக் கொண்டு வந்தனர். அதை நால்வரும் 16 ரூபாவாக வாங்கினர். அதைத் உரித்துப் பங்கு போட வீட்டிற்குக் கொண்டு சென்றனர்.

நால்வரும் மதுபோதை காரணமாக தள்ளாடியபடி உடும்பையும் கையில் தூக்கியபடி கொண்டு சென்றனர். வீடு கிட்டிவிட்டது அதற்குள் கையிலிருந்த உடும்பு திணறிக் கீழ விழுந்து ஓட்டம் பிடித்தது இவர்களும் உடும்பை விடவில்லை. அதை துரத்திச் சென்றனர்!

உடும்பு ஓர் புற்றுக்குள் புகுந்துவிட்டது புற்றுக்குள் வால் மட்டும் தெரிந்தது. உடும்பு என்று எண்ணி அந்த வாலைப்பிடித்து இழுத்தனர். அது ஒரு பெரிய சாரைப்பாம்பு!

பாம்பை வெளியில் இழுத்ததும் அதைச் சுழற்றித் தரையில் அடித்தனர்! பாம்பு இறந்து விட்டது. உடும்பு ஓடித் தப்பிவிட்டது. கடைசியில் நண்பர் நால்வரும் வெறுங்கையுடன் வீடுசென்றனர்!

### உபாலி விமானம் மர்ம மறைவு:

## இந்தோனேஷிய ஜனாதிபதிக்கு ஜே. ஆர். விசேட செய்தி

[கொழும்பு]

இந்தோனேஷியா ஜனாதிபதி சுகார்ட்டோவுக்கு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன விசேட செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார். வர்த்தக கப்பல் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இச் செய்தியை எடுத்துச் சென்றுள்ளார்.

உபாலியின் விமானத்தின் சில்லு காணப்பட்ட கடல் பகுதியில் விமானத்தின் சிதைவுகள் காணப்படுகிறதா? என்பதையிட்டு தேடுதல் செய்யப்படுகிறது.

மீனவர்களால் கண்டெடுக்கப்பட்ட சில்லு விமானத்தில் பொருத்தப்பட்டிருந்ததில்லா? அல்லது விமானத்தில் கொண்டு செல்லப்பட்ட மேலதிக சில்லா என்பதைகண்டுபிடிக்கமுயற்சி எடுக்கப்பட்டுவருகிறது

விமானம் ஆகாயத்தில் வெடித்தபின் இச்சில்லு கடலில் வீசப்பட்டிருக்கலாம்எனக் கருதப்படுகிறது.

சில்லு கண்டுபிடிக்கப்பட்ட கடல் பிரதேசம் முழுவதிலும் தேடுதல் நடத்த கப்பல்கள் தயாராகின்றன. (ஈ)


## மாதக் கடைசிவார விற்பனை!

5% கழிவு

ஆர்பிகோ

உற்பத்திப் பொருட்களான

★ உருக்கு தளபாடங்கள்

★ மெத்தைகள்

★ ரபர் சீற்றுகள்

★ குஷன்வகைகள்

முதலியன

15% கழிவு நீடித்துழைக்கும் துணி உறைகள் கொண்ட சகல

லேட்டெக்ஸ்ஃபோம்

மெத்தைகள்

வெகு விரைவில்

கே. ஜி. பிளாஸ்ரிக்

உற்பத்திப் பொருட்கள்

விற்பனைக்கு வருகின்றன!

✯ பிளாஸ்ரிக் பேஷின்கள் ✯ வாளிகள்

✯ போத்தல் வகைகள் இன்னும் பல, பல....

டிரான்ஸ்லங்கா மாக்கெட்டிங் லிமிட்.

இல. 1 புதிய நவீனசந்தை (முதலாவது மாடி), யாழ்ப்பாணம். போன்: 23027


## பாவனையாளர் சங்கம் தொடர்பான சுற்றுநிருபம்

(சாவகச்சேரி)

பாவனையாளர் சங்கங்களில் அங்கத்துவம் பெற தகுதியற்றவர்கள் அதில் அங்கத்துவம் வகித்தால் அவர்கள் உடனடியாக நீக்கப்படல் வேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் திரு ரி. மார்க்கண்டு உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து பாவனையாளர் சங்கங்களுக்கு சுற்று நிருபம் ஒன்றையும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அதில் அவர் தெரிவிப்பதாவது:-

"உள்நாட்டு வியாபாரப் பிரிவின் நோக்கத்திற்கமையாத விதத்தில் பாவனையாளர் சங்கங்களில் அங்கத்தவர்கள் இடம் பெறுவது முறையல்ல. இதுபற்றி பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. ஆகவே இவ்வாறனவர்கள் சங்கத்திலிருந்து விலகியதாக கருதப்பட வேண்டும். உரிய காலத்தில் வருடாந்தக் கூட்டங்களை நடத்தாமல் தொடர்ந்தும் நிர்வாகத்தில் இருப்பதும் அனுமதிக்கப்படமாட்டாது. இடையாள அட்டைகள் எதுவும் வைத்திருப்பதும்செல்லுபடியற்றது.

பாவனையாளர் சங்கங்களில் இடம்பெறத் தகுதியற்றவை என 20 காரணங்களையும் அவர் தமது சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளார்.

## இனிய பண்புகளின் இருப்பிடமாக விளங்கியவர்

இனிய பண்புகளின் இருப்பிடமாக விளங்கிய கந்தையா மதியாபரணம் அமரத்துவமெய்தி ஆண்டொன்று உருண்டோடிவிட்டது. ஆயினும் அவரது இளமைத்தோற்றமும் இனிய பண்புகளும் இன்றும் அவர் எம்முடன் வாழ்ந்துகொண்டிருப்பதாக எமது நெஞ்சிலே நிலைத்து நிற்கின்றன.

நல்லூர் ஆசீர்வாதப்பர்வீதியைச் சேர்ந்த கந்தையா மகேஸ்வரி தம்பதிகளின்மூத்த புதல்வரான மதியாபரணம் சிறந்த சமூகசேவையாளராகவும் கலைஞராகவும் பரிணமித்தார். காலஞ்சென்ற பிரபல நாடக, திரைப்பட, நடிகர் டிங்கிரி கனகரத்தினத்துடன் சேர்ந்து பல நாடகங்களை எழுதியும் நடித்தும் புகழ் பெற்ற இவர், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன யாழ்ப்பாண நிலையத்தில் பணியாற்றிவந்தார், இவர் யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவராவர். இனிய பண்புகளால் பழகியவர் பாசமுடன் இவரை அரவணைத்து மகிழ்வதைபொறுக்காத காலன் 31வயதிலேயே இவரைக்கவர்ந்து கலைத்துறைக்கும் உற்றார்க்கும் இவரின் ஏழு உடன்பிறப்புகளுக்கும் அன்னை தந்தையர்க்கும் கண்ணீரைப் பரிசாக அளித்துவிட்டான். அன்னாரின் ஆத்மா இறையடியில் அமைதிபெற பிரார்த்திடுபோம்.

- கரன்

## அறுவடைவிழா

[மன்னார்]

மன்னார் - இலுப்பைக் கடவை பகுதியில் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்ட காலபோக விவசாயத்தின் அறுவடைவிழா நடைபெற்றது.

இலுப்பைக்கடவை சமநல சேவை நிலையத்தலைவர் திரு. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த பலஅதிகாரிகள்கலந்து கொண்டனர்.

# இன்றைய பலன்

மாசி மாதம் 13-ம் திகதி
வெள்ளிக்கிழமை
(25—2—83)

**மேடம்:** புதிய சாதனை ஒன்றை உருவாக்க முன்நிற்பீர்கள், கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும். இடமாற்றத்துக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படலாம்.

**இடபம்:** அந்தஸ்தில் உயர்வு தென்படும், எதிர்பார்த்த பதவி உயர்வுக்கு இன்று முன்னோடி நடவடிக்கை எடுக்கப்படும். வழக்கு விவகாரங்களில் வெற்றி உண்டு.

**மிதுனம்:** வருமானத்தில் வீழ்ச்சி தென்படும், வைத்தியச் செலவுகளுக்கும் இடமுண்டு, இன்று சிறு வருத்தம் வரினும் பெரு முறையில் கவனிக்கப்படல் நன்று.

**கடகம்:** திருடர் பயத்திற்கு இடமுண்டு, விவசாயிகள் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும், காணிப் பிணக்கு கவலையைத் தரலாம், நிதான புத்தி வேண்டும்.

**சிங்கம்:** கண்ணியமான உடன்படிக்கை யொன்றில் கைச்சாத்திடப்படலாம், வரவேற்கத்தக்க தினம், திருமணப் பேச்சு ஒன்று மகிழ்ச்சியைத் தரும்.

**கன்னி:** ஆசாரக் குறைவுக்கும் அவசரப் போக்கிற்கும் இடமுண்டு, அதிக பேச்சைத் தவிர்த்தல் நன்று, கடிதம் ஒன்று கவலையைத் தரலாம், பிரயாணத்தைத் தவிர்க்கவும்.

**துலாம்:** கல்வித் துறையில் வித்துவத் தன்மை தென்படும் வாகனம் செலுத்துவோருக்கு நன்மதிப்பு உண்டு, பெண்களின் உறவுமுறை நீடிக்கலாம்.

**விருச்சிகம்:** பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகின்றது, அமைதியான நடவடிக்கைகள் மூலம் மற்றவர்களுடைய நட்பைப் பெறுவீர்கள்.

**தனு:** ஆயுதபீடைக்கு இடமுண்டு, எனவே எதிலும் அவதானம் வேண்டும், அவசரப் போக்கு அக்கினியாகிவிடவும் கூடும். சிறிய விபரீதங்களையும் விளைவிக்கலாம்.

**மகரம்:** ஆசிரியர்களுக்கு செல்வாக்குப் பெருகும், கல்வி கற்போர்க்கு சிறப்பான தினம். மாணவர்கள் விளையாட்டில் முன்னேற்றமடைவார்கள், பொன்னான தினம்.

**கும்பம்:** மொட்டைக்கடிதம் ஒன்று சிறிய பரபரப்பை ஏற்படுத்தலாம், நண்பர்களின் தொடர்பு முடிவில் பிரிவுத் துயரில் வீழ்த்திவிடும், மௌனம் நன்று

**மீனம்:** சிறிய எண்ணம் பெரிய புகழைத் தேடித்தரும், பிதாவின் அன்புக்கு இடமுண்டு, உறவு முறைகள் பலமாக இருக்கும், விவசாயிகளுக்கு போற்றத்தக்க தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## கிரிக்கெட் டெஸ்ட்
## இந்தியா 7-219

புதுடில்லி, பெப். 24
இந்தியாவுக்கும், மேற்கிந்தியாவுக்குமிடையிலான டெஸ்ட் நேற்று ஜமெய்க்காவின் கிங்ஸ்டன் நகரில் ஆரம்பமானது.

'பூவா தலையா' போடப்பட்டபோது மே. இந்தியாவே முதலில் துடுப்படிக்கான சந்தர்ப்பத்தைப்பெற்றது. ஆனால் இந்தியாவுக்கே அந்த சந்தர்ப்பத்தை அது வழங்கியது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 7 விக்கட்டுகள் நட்டத்துக்கு 219 ஓட்டங்களை பெற்றது. வெளிச்சம் போதாமையால் 50நிமிடங்கள் முன்னதாகவே ஆட்டம் நிறுத்தப்பட்டது. (கி)

இன்று ஆரம்பமாகும்
## யாழ்.கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே, இன்று ஆரம்பமாகும் கிரிக்கெட் போட்டிகளின் விபரம் வருமாறு;

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியுடன் மோதுகின்றது இப்போட்டி பருத்தித்துறையில் நடைபெறும்.

யாழ் மத்திய கல்லூரி, யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரியுடன் மோதும் இப்போட்டி, யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் இந்துவுடன் மோதும். இப்போட்டி வட்டுக்கோட்டையில் நடைபெறும்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி யாழ் இந்துக் கல்லூரியுடன் மோதும். இப்போட்டி தெல்லிப்பளையில் நடைபெறும். (வி)

## லெபனானில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)
கப்பட்டது நேற்று முன்தினம் சுமார் 350 பேர் வரை மீட்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது

லெபனானில் ஏற்பட்ட மிகப் பெரும் இயற்கை அழிவு இந்த பனிப்பொழிவு என்று அறிவிக்கப்பட்டது.

'ஆலால்' துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்:
# பெண்ணைத்தேடி
## பொலிஸார் வலைவீச்சு

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் சுடப்பட்ட சம்பவம் தொடர்பாக, பெண் ஒருவரை பொலிஸார் தேடுகின்றனர்

சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர், இப்பெண் நற்சான்றுப்பத்திரமொன்றை திரு ஆலாலசுந்தரத்திடம் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் வீட்டுக்குச் சென்றிருந்ததாகவும், எம். பி யின் செயலாளர் திரு இரத்தினம் மேற்படி கடிதத்தை 'டைப்' செய்து கொண்டிருந்தபோது சூட்டுச் சம்பவம் நிகழ்ந்ததென்றும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு இரத்தினம் ஓடிவந்து துப்பாக்கி இளைஞர்களில் ஒருவரை கட்டிப் பிடித்தபோது, இந்த இளைஞர் இவரைத் தாக்கவே வாசல் வரை சென்றுவிட்டு பின்னர் திரும்பியபோது அங்கிருந்த பெண் மர்மமாக மறைந்துவிட்டார் என்றும் விசாரணையில் தெரியவந்திருக்கிறது

அந்தப்பெண் கொடுத்திருந்த விலாசமும் பொய்யானதாம்!

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்று
பருத்தித்துறை

மரணசாதனமில்லாது காலஞ்சென்ற கரவெட்டியைச் சேர்ந்த சின்னப்பு அமிர்தநாதரின் அசையும், அசையாச் சொத்துக்கள் தொடர்பாக.

சின்னப்பு அமிர்தநாதர் கைம்பெண் செல்லமணி லீனப்பிள்ளை,
'இராஜவாசா'
கன்னொல்லை,
கரவெட்டி.

—விண்ணப்பதாரர்

தத்துவ நியாயாதிக்கம்
வழ. இலக்கம்: 1161 / ரி

எதிர்

1. அமிர்தநாதர் மரியதாஸ் செல்வநாதர்
2. அமிர்தநாதர் மகள் எவறெஸ்ற் கிறீனி
3. அமிர்தநாதர் மகள் மரிய அசெம்ரா
4. அமிர்தநாதன் எட்வேட் அமலநாதன்
5. அமிர்தநாதர் மகள் நொயலா விசி
6. அமிர்தநாதன் டயஸ் லோயலா வின்சி

எல்லோரும், 'இராஜவாசா'
கன்னொல்லை,
கரவெட்டி.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச் சொத்தை நிர்வகிப்பதற்கான வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனமற்ற சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது அக்கறை உள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு வைகாசி மாதம் 5ம் திகதி மு. ப. 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1983ம் ஆண்டு மாசி மாதம் 10ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி,
என். செல்வராஜா,
பதிவாளர்.

திரு. சு. அரியநாயகம்,
சட்டத்தரணி. 6277

## மூவர் கைது

[மன்னார்]
பட்டப்பகலில் வீடொன்றிற்கு தீவைத்த மூவரை மன்னார் பொலிசார் கைது செய்தனர்,

மன்னார் பரப்புக் கடந்தான் பகுதியைச்சேர்ந்த தனலட்சுமி என்பவரது வீட்டிற்கே தீவைக்கப்பட்டது,

இத் தீவைப்புச்சம்பவத்தினால் வீடு முற்றாகஎரிந்ததுடன் பெருந்தொகையான பொருட்களும் சேதமடைந்தன,

இத்தீவைப்புச் சம்பவம் தொடர்பாக என். கிருஸ்ணன் என், லோகு, என். முருகையா ஆகிய 3 சந்தேக நபர்களைப் பொலிசார் கைதுசெய்ததுடன் தலைமறைவாகியுள்ள என். கணேசு என்பவரையும் தேடி வருகின்றனர், [வெ]

## பம்பாய்வெங்காய மாதிரிச் செய்கை

(மன்னார்)
அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பம்பாய்வெங்காய மாதிரிச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மன்னார் விவசாயத் திணைக்களம்மேற்கொண்டுவருகிறது.

## அறிவித்தல்
### மின்தடை

இலங்கை மின்சாரசபையினரால் சில அத்தியாவசிய திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால், 26-02-1983ம் திகதி சனிக்கிழமை இரவு 11-00மணிமுதல் 27-02-1983ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7-00 மணி வரையும் (1 நல்லூர், (2) வைமன் வீதி உப-மின் நிலையங்களிலிருந்து மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சி. வீ. கே. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
22-02-1983. 6308

## நன்றி நவிலல்

29-01-83 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் கலாநிதி கந்தையா சுந்தரலிங்கம் Ph D அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்துநேரில் ஆறுதல்கூறியவர்கட்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்கட்கும், இறுதிக் கிரியைகள் குறைவின்றி நிகழ உதவியவர்கட்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமதி கமலாதேவி சுந்தரலிங்கமும் பிள்ளைகளும்
'தவ வாசா,'
வர்த்தலைவிளான், தெல்லிப்பளை. (6298)

கடைசி சிலதினங்கள்
ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்)

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
சிவாஜி - விஜயா
ராமன் எத்தனை ராமனடி

மனோகரா தினசரி
[யாழ்.நகர்] 10-30, 2-15, 6-00, 9-45
என். டி. ராமராவ், கே மாலதி, எஸ். வி ரங்கராவ், ரேலங்கி
பாதாள பைரவி

கடைசி சில தினங்கள்
வின்ஸர் (யாழ். நகர்)
வசந்த மாளிகை
(புதிய பிரதி)

றீகல் (யாழ். நகர்)
கடைசி வாரம்
எங்க வீட்டுப் பிள்ளை
விரைவில்
சட்டம் ஒரு இருட்டறை

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்


லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
10-30, 2-00, 4-30, 7-00, 9-30
19--25
EYE OF THE NEEDLE
Adults Only
27-2-83 முதல் குரு

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-45
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி - பாலாஜி
நம்பியார், எம். ஆர். ராதா
என் கடமை
புத்தம் புதிய பிரதி

சில தினங்கள் மட்டும்
ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ்,
ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
வருகிறது!
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ராஜா (யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (ஈஸ்ட்மன் கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
எமது அடுத்த வெளியீடு
துணிவே துணை



யாழ். மாநகர மண்டபத்தில் நடைபெறும் பனம்பொருள் கண்காட்சியை இந்தோனேஷிய நிபுணர் திரு ஜெம்பொங், கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் (பனம்பொருள்) திரு. எஸ். வேலாயுதபிள்ளை ஆகியோர் பார்வையிடுவதை முதல் படத்திலும், உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதி திரு. ஐ ஒசௌறெய், பனை ஓலையாலான ஒரு தயாரிப்பை கையில் எடுத்து மகிழ்வதையும், அருகில் பனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. க. நடராஜா நிற்பதையும் இரண்டாவது படத்திலும் காணலாம்

## இன்று நடக்கும் கலை நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச பனைவளத் தொழிற்பாட்டு மாநாட்டின் கலைநிகழ்ச்சிகள் இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

வட்டார சங்கீத கல்வி அதிகாரி சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை குழுவினரின் பனைப்பாட்டு ஆறுமுகம் பிள்ளை குழுவினரின் நாதவரப் பின்னணியுடன் நிகழும். விளக்கம் செய்பவர் திருமதி சகலகலாவல்லி சந்திரராஜா.

கலைஞர் வேல் ஆனந்தன் நடனக் குழுவினரின் 'பசி தீர்க்க பரமன் அளித்த பனை' என்னும் நாட்டிய நாடகமும், மட்டுநகர் தென்மோடி நாட்டுக்கூத்து 'கண்டிராசன்' நாடகமும் இடம்பெறவுள்ளன. [சுண்டி. நிரு]

## பல்கலைக்கழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மிகமோசமாகத் தடுக்கிறது.'

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் திரு வ. சு. ஸ்ரீஸ்கந்தராசா, யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் ஒருநாள் அடையாள பகிஷ்கரிப்பை நேற்று ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கவலை தெரிவித்தார்.

வகுப்புகளைப் பகிஷ்கரிப்பதற்கு முன்னதாக நேற்றுக் காலையில் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர்.

'பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டுமென்றும், இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுதலைசெய்யவேண்டும் அல்லது சாதாரண சட்டத்தின் கீழ் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்றும், மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்து சகல பல்கலைக்கழக மாணவர்களும் ஒருநாள் அடையாளபகிஷ்கரிப்பைநேற்றுச் செய்தது குறிப்பிடத்தக்கது. (மா)

## ஆறு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய ஆறுபேர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது

"எனது கட்சிக்காரர்கள் எனக்குத் தந்துள்ள உபதேசப்படி நான் இந்த நீதிமன்றத்தில் தொகுப்புரையை நிகழ்த்தவில்லை" என்று எதிர்த்தரப்புச் சட்டத்தரணி என். சத்தியேந்திரா நீதிபதியிடம் தெரிவித்து எதிர்தரப்பு விசாரணையைமுடித்துக்கொள்வதாக அறிவித்தார்

எதிர்த்தரப்புச் சட்டத்தரணி தொகுப்புரை நிகழ்த்தாததால், தாமும் தொகுப்புரையை இங்கு நிகழ்த்தவில்லை என்று பிரதி சொலிஸிஸ்டர் ஜெனரல் சுனில் டி சில்வா தெரிவித்தார்.

இதனை அடுத்து, நீதிபதி திரு. சி. எல். ரி மூனமலே தமது தீர்ப்பை வழங்கினார்.

இவ்வழக்கில் ஐந்தாவது எதிரி சுந்தரம் ஸ்ரீசபாரத்தினம் நீதிமன்றத்தில் ஆஜராகாமலே, வழக்குத் தொடர்ந்து நடைபெற்றுவந்தது.

## என்றோ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரத்தின் முக்கிய அங்கமான இந்த நீதிமன்றம் எம்மை விடுவித்து, அரசுக்கு எதிரான போராட்டத்தை நடத்த எம்மை விடுமென்று எதிர்பார்க்கவில்லை. அப்படியான 'மயக்கம்' எமக்கு என்றுமே ஏற்பட்டதில்லை.

'என்றோ ஒருநாள் நீதி கிடைக்குமென்பது திண்ணம்.

"சிறிலங்கா அரசின் ஏவலாளர்கள், 'நாம் கொலைஞர்கள், கொள்ளையாளிகள், பயங்கரவாதிகள், வகுப்புவாதிகள்' என்று எம்மை வர்ணித்துள்ளார்கள். தமிழ் மக்கள் இந்த விஷமப் பிரசாரத்தைத் துளியேனும் சிறிதும் ஏற்கவில்லை. சிங்கள மக்களின் கணிப்பைக் கோணலாக்கி, எமக்குப் பயங்கரவாதிகள் என்ற போர்வையிட்டு, கொடூரமான ஒடுக்குமுறைக்கு, சட்டம், ஒழுங்கு என்ற மெருகு பூசி நீதியைக் கறுப்புப் போர்வையால் மூடி வைத்திருக்கிறது சிறிலங்கா அரசு

"இன்று எமது இனத்தை அடக்கி ஒடுக்கப்பயன் படுத்தப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டம், காலப்போக்கில் கிளர்ந்தெழும்!" என்றார்.

### கவிதையும் பாடினார்

நீதிமன்றத்தில் நேற்று குட்டிமணி தான் எழுதிய இரு கவிதைகளைப் பாடினார். தமக்கு அளிக்கப்பட்ட உணவு பற்றி அதில் அவர் குறிப்பிட்டார், அக்கவிதைகளின் சில பகுதிகள் வருமாறு:-

இது தமக்கு வழங்கப்பட்ட மத்தியானச் சாப்பாடு பற்றியது என்று குறிப்பிட்ட கவிதை-

காக்கையரே! காக்கையரே!
எட்டி எட்டி பார்த்தேன்
என்ன உணவு என்று
கொஞ்சம் சோறுண்டு:
கீரைத் தண்டுண்டு!
கருவாட்டுக் குழம்புண்டு!
ஏதோ இரண்டு கறியுண்டு!
இது தான் எமக்கு தர்மிஷ்ட
ஆட்சி தந்தது!
உன் நிலையும் என் நிலையும்
என்னென்று புரிகிறதா?

இன்னொரு கவிதை-

காலை உணவாக, ஆமிச்
சிறையிலே,
அரைறாத்தல் பாண் என்று
அதில் பாதி தந்திடுவார்!
அளவு பற்றி கேட்டுவிட்
டால்,
உடலெல்லாம் வலிக்கிறதே!
அடி உதை தருவனே
அதிகாரி; யாரிடம்
நாம் முறை சொல்வோம்'?

'தமிழ் ஈழம் வாழ்க! தமிழ் வாழ்க! என்று கூறித் தனது உரையை முடித்தார் குட்டிமணி.

## சிறிலங்கா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டு நடாத்தி முடித்த பயங்கரவாதத்துக்கு இணையான பயங்கரவாதம் எங்குமே நடந்திருக்க முடியாது.

அந்தச் சந்தர்ப்பத்தில் சிறிலங்கா அரசின் அடி ஒற்றிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட துப்பாக்கிகளைச் சுழற்றித் திரிந்துள்ளனர். [கி]

## 5-வது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமாப்பதார்.

காலியாகும் பாராளுமன்ற ஆசனத்துக்கு ஒருவரை கட்சி ஒரு மாதத்துக்குள் நியமிக்கத் தவறும்பட்சத்தில், இடைத்தேர்தல் நடாத்த இத்திருத்தச்சட்டம் வழிசெய்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், அத்தனகலை, வட்டுக்கோட்டை போன்ற தொகுதிகளின் நியமனம் கட்சியின் நடவடிக்கைகளால் ஏற்பட்டசுணக்கத்துக்கு மக்கள் தீர்ப்பு பதில்சொல்லக்கூடிய வகையில் இத்திருத்தச்சட்டம் அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.


## விற்பனைக்கு

வீடுகள் கட்டக்கூடிய 9 துண்டுக் காணிகள் வல்வெட்டித்துறை நெற்கொழுகோவில் ஒழுங்கையில் உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளும் முகவரி:

ராஜ் சில்க்ஸ் லிமிட்டெட், ரகுநாமன் கட்டிடம், 77 3/1, பெரியகடை, யாழ்ப்பாணம் தொலைபேசி; 22378

இராமலிங்கம் பாலசுப்பிரமணியம், 52, வைமன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22334

(6322)

இத்தாலி, பெல்ஜியம் விசாவுடன்
பிரான்ஸ், கனடா, திரிப்பொலி
டப்ளின், நோர்வே
ஆகிய நாடுகளுக்கு மிக விரைவில் விமானப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு கொள்க:

"CROSS TRAVEL SERVICE"

2-வது தொடர்மாடிக் கட்டிடம்,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
6265

★ வெளிநாட்டுப் பயணமா?
யாழ்ப்பாணத்திலேயே
குறைந்த கட்டணத்தில்
எந்த நாட்டிற்கும்
விரும்பிய விமானத்தில்
செல்ல
★விமான டிக்கட்டுகள்
★பிரயாண காசோலைகள்
(AMERICAN EXPRESS TRAVELLER CHEQUES)
வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

மக்கினென் டிறவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
த. பெ. எண் 92, தொலைபேசி: 24154

## காணவில்லை

உடுவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவப்பிரகாசம் கமலாம்பிகையை 23-2-83 தொடக்கம் காணவில்லை. இவர் புறப்படும்போது வெள்ளைச்சட்டையும் ரோஸ் நிறச் சேலையும் அணிந்திருந்தார். நரைத்த தலைமயிருடன் 5 அடி 2 அங்குலம் உயரம் உள்ளவர். பொது நிற மெலிந்த தேகத்துடன் மன நோயினால் வருந்துபவர்.

இவரைப்பற்றிய தகவலை திரு. ந. சிவப்பிரகாசம், "கௌரி இல்லம்", லவ் லேன், உடுவில் என்ற விலாசத்திற்கு அல்லது அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கவும். (6333)

ஹோம் பிறென்ஸ் லிமிட்.
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

மெக்கானிக் தேவை

எமது நெடுந்தூரப் பயண பஸ்களில் நாளாந்த வேலை செய்வதற்கு அனுபவமுள்ள மெக்கானிக் ஒருவர் தேவை.
சான்றுகளுடன் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்


இலங்கை "ஈழநாடு" லிமிட்டெட் ... 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25-ம் திகதி ...
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B 100236/81 Eelanaadu - P. O. Box 49 Telegram Eelanaadu, Telephone 22389 - 24126,